Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Imapact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p109-118 TIRJTS-2026-0018
DOI: 10.63300/tmi12n062026.11

RESEARCH ARTICLE

சமூகப் பிரதிபலிப்பினூடே மாற்றமடைந்து வரும் பரநாட்டிய ஆற்றுகை மரபும்: அவசியமும்

The Bharatanatyam Performance Tradition Transforming Through Social Reflection: Its Necessity

Mr. I. Sajith[1,*]

[1] Senior Lecturer G-II in Dance Department of Dance, Drama & Theatre Arts, Swamy vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka

***Corresponding author:** Mr. I. Sajith, sajithi@esn.ac.lk

ARTICLE INFO

Article history
Received: 5 October 2026
Revised: 15 October 2026
Accepted: 20 October 2026

Article ID
TIRJTS-2026-0018

Peer review
Double-blind peer review

Keywords
Bharatanatyam
Contemporary Performance
Anthropology
Social Reflection
Caste
Gender
Identity
Globalisation

ABSTRACT

Bharatanatyam is a dynamic classical Indian dance form that continually evolves to reflect shifting social structures, cultural identities, and historical transformations. While often perceived as fixed in heritage, the art form underwent significant reconstruction in the twentieth century as it shifted from traditional hereditary communities into urban, middle-class, and upper-caste spaces. In the contemporary era, Bharatanatyam continues to adapt through innovative bodily expressions, technological integration, interdisciplinary collaborations, group dynamics, and themes centered on social justice and diasporic identities. Adopting an anthropological approach, this study investigates how Bharatanatyam and society mutually influence one another, examining how artists negotiate tradition and innovation while representing issues of caste, gender, class, religion, migration, and national identity through movement, abhinaya (expressional technique), music, costume, and stage design.

How to cite this article: Mr. I. Sajith (2026). சமூகப் பிரதிபலிப்பினூடே மாற்றமடைந்து வரும் பரநாட்டிய ஆற்றுகை மரபும்: அவசியமும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 109119. https://doi.org/10.63300/tmi12n062026.11
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

சுருக்கம்:-

காலத்தின் ஓட்டத்தில் வளைந்து கொடுக்காத எக்கலையாயினும் மறைந்துவிடும் என்பது பிரபஞ்ச நியதியாகும். பரதக்கலை இந்தியத் துணைக்கண்டத்தின் முக்கியமான செவ்வியல் ஆடற்கலை வடிவமாக மட்டுமல்லாமல், சமூக நினைவுகள், பண்பாட்டு அடையாளங்கள், பாலினக் கருத்தாக்கங்கள், சாதி மற்றும் வர்க்க

உறவுகள், சமயப் பார்வைகள், தேசியவாதம், புலம்பெயர்வு மற்றும் உலகமயமாக்கல் போன்ற பல்வேறு சமூகச் செயல்முறைகளை வெளிப்படுத்தக்கூடிய ஓர் இயங்கியல் நிகழ்த்துக் கலை வடிவமாகவும் விளங்குகிறது. காலணித்துவ நிலையியல் பரம்பலால் பாரம்பரியம் என்ற பெயரில் நிலையானதாகக் கருதப்படும் பரதநாட்டிய ஆற்றுகை மரபுகள், இருபதாம் நூற்றாண்டிலிருந்து மரபுகளாக பாரம்பரியத்துடனும், மரபுமாற்றங்களுடனும் தொடர்ச்சியாக மறுவடிவமைக்கப்பட்டுள்ளன. இவை காலத்தின் தேவையானதாகவும் அவசியமானதாகவும் அமைகின்றது.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பது போல் சமுதாய மாற்றங்களிற்குட்பட்டே ஆடற்கலை வளர்ந்துள்ளது. குறிப்பாக அதன் நவீன மறுவடிவாக்கம், பரம்பரை நடனக் கலைஞர் சமூகங்களிலிருந்து நகர்ப்புற, நடுத்தர வர்க்க மற்றும் உயர்சாதி கலைப் பரப்பிற்கு நகர்ந்த வரலாற்றுடன் தொடர்புடையது பல் பண்பாட்டு கப்பலாக பயணம் செய்திருக்கிறது. சமகாலத்தில் இம்மாற்றம் மேலும் விரிவடைந்து, புதிய கருப்பொருள்கள், புதிய உடல்மொழிகள், தொழில்நுட்பப் பயன்பாடு, குழு ஆற்றுகைகள், பல்துறை இணைவு, புலம்பெயர் அடையாளங்கள் மற்றும் சமூக நீதியை மையப்படுத்திய படைப்புகள் ஆகியவற்றை உருவாக்கியுள்ளது.

இம்மாறுதல்களை மானுடவியல் நோக்கில் ஆராய்வதை இவ்வாய்வு நோக்காக கொண்டுள்ளது. குறிப்பாக “பரதநாட்டியம் எவ்வாறு சமூகத்தைப் பிரதிபலிக்கிறது?”, “சமூகம் எவ்வாறு பரதநாட்டியத்தின் ஆற்றுகை வடிவத்தை மாற்றுகிறது?”, “பாரம்பரியம் மற்றும் புதுமை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பேச்சுவார்த்தை நடத்துகின்றன?” என்பன ஆய்வின் மையக் கேள்விகளாக அமைகின்றன. மேலும் சமகால பரதநாட்டியத்தில் சாதி, பாலினம், வர்க்கம், மதம், தேசிய அடையாளம், புலம்பெயர்வு, தொழில்நுட்பம் மற்றும் சமூக நீதி போன்ற விடயங்கள் எவ்வாறு உடல்மொழி, அபிநயம், இசை, ஆடை, மேடை அமைப்பு மற்றும் நிகழ்த்தல் முறைகளில் பிரதிபலிக்கின்றன என்பதும் ஆராயப்படுகிறது.

திறவுச்சொற்கள்;:- பரதநாட்டியம், சமகால ஆற்றுகை, மானுடவியல், சமூகப் பிரதிபலிப்பு, சாதி, பாலினம், அடையாளம், உலகமயமாக்கல்.

அறிமுகம்:-

பரதநாட்டியம் இன்று “பாரம்பரியமான”, “செவ்வியல்”, “மரபியல்” கலை என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும் அதன் தற்போதைய வடிவம் வரலாற்றின் எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலும் உறைந்து கிடந்த ஒன்றல்ல. மாறாக அது சமூக, அரசியல், சமய, பொருளாதார மற்றும் பண்பாட்டு மாற்றங்களுடன் தொடர்ந்து மறுவடிவம் பெற்று வந்துள்ளது. தென்னிந்திய நிகழ்த்துக் கலைகளின் நவீன உருவாக்கத்தை காலனித்துவம், தேசியவாதம் மற்றும் நவீனத்துவம் ஆகியவற்றின் பின்னணியில் மானுடவியல் பங்கெடுப்புக்கள் மூலமாக புரிந்துகொள்ள வேண்டும். இச்சமூக

பிரதிபலிப்புக்கள் பரதநாட்டிய உள்ளுருவாக்கத்தில் தாக்கம் செலுத்தாது விட்டிருக்கவில்லை.

இன்றைய பரதநாட்டிய ஆற்றுகையில் பாரம்பரிய அடவு, முத்திரை, அபிநயம், நிருத்தம், நிருத்தியம், நாட்டியம், மார்க்கம், வர்ணம், பதம், ஜாவளி, தில்லானா போன்ற கூறுகள் தொடர்ந்தாலும், அவற்றின் பயன்பாட்டு சூழல்கள் மாறியுள்ளன. முன்பு குறிப்பிட்ட சமய, அரசவைக் கலாசார அல்லது பாரம்பரிய நிகழ்த்தல் சூழல்களுடன் நெருங்கிய தொடர்புடையிருந்த பல கூறுகள் இன்று அரங்கம், பல்கலைக்கழகம், விழாக்கள், சர்வதேச மேடைகள், சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்களில் புதிய பொருள்களுடன் பயன்படுத்தப்படுகின்றன.

இதனால், சமகாலப் பரதநாட்டியத்தை "பழமையான கலையின் தொடர்ச்சி" என்று மட்டும் அணுகுவது போதுமானதல்ல. அது தொடர்ச்சியும் மாற்றமும் இணைந்துள்ள சமூகப் பண்பாட்டு நிகழ்வு ஆகும். இவை நவீனமயமாதலின் போக்குகளோடு பயணப்படவேண்டியுள்ளமை அவசியமானதாகிறது. மரபின் தொடர்ச்சியாக புதுமைகளை புனைதலுடன் மரபையும் பாதுகாத்தல் வேண்டும் எனும் பொதுமைத்துவ கருத்தாடலோடு கூடி சமூக பிரதிபலிப்பிற்கு அவசியமான படைப்புக்களை பிரசவிக்க வேண்டும் என்பது என் கருத்தாகும்.

இந்த ஆய்வு பரதநாட்டியத்தை வெறும் அழகியல் கலை என்ற வரையறையிலிருந்து வெளியே கொண்டு வந்து, சமூக-பண்பாட்டு ஆவணம் என்ற நிலையில் புரிந்துகொள்ள உதவும். மேலும்: பரதநாட்டியக் கல்வியாளர்களுக்கு, நடனக் கலைஞர்களுக்கு, நடன அமைப்பாளர்களுக்கு, மானுடவியல் ஆய்வாளர்களுக்கு, கலை நிறுவனங்களுக்கு, பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கு, பண்பாட்டுக் கொள்கை உருவாக்குநர்களுக்கு, பயனுள்ளதாக அமையும்.

பரதநாட்டியத்தின் வரலாற்று மறுவடிவாக்கம்:-

இன்றைய பரதநாட்டியத்தின் உருவாக்கத்தை அதன் நவீன மறுவடிவாக்க வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது. ஆரம்பகாலத்தே மக்களுடைய வாழ்வியலோடு கலை தோற்றம்பெற்று பின்னர் மக்கள் கலையாக வலுப்பெற்று பல்வகைப்பட்ட பண்பாட்டு படையெடுப்புக்களால் மன்னர்கள் கலைகளாக ஆலயங்களோடு இணைப்புபெற்று பின் மறுமலர்ச்சிகண்டு செவ்வியல் கலையாகி மறுவுரு பெற்றிருக்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இந்திய தேசியவாதம், சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் நகர்ப்புறக் கலாசார அமைப்புகள் ஆகியவை இணைந்து தென்னிந்திய நடனங்களின் புதிய வரையறைகளை உருவாக்கின என்றால் மிகையாகாது.

சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்டதான மானுட தோற்றுவாயோடு இசைந்ததான மக்கள்வயப்பட்ட ஆடற்கலை காப்பிய காலத்திற்கு பின்னர் முடிக்குரிய மன்னர்கால ஆட்சிமையிலே பக்தியோடும், மன்னர்தம் புகழோடும் பிற்பட்ட காலங்களில் பன்மைத்துவப்படுத்தப் பட்டதுமாக பாடுபொருள் அமையப்பெறுவதனை காணமுடிகின்றது. இதன் விளைவாக, முன்னர் குறிப்பிட்ட பரம்பரை நடனக் கலைஞர் சமூகங்களின் வாழ்க்கை, கலை மற்றும் சமூக நிலைமைகளுடன் தொடர்பியலில் இருந்த ஆடல், புதிய சமூக மற்றும் அழகியல் கட்டமைப்பில் "செவ்வியல் கலை" என்ற புதிய அடையாளத்தைப் பெற்றது. எனினும் இந்த மறுவடிவாக்கத்தில் சாதி மற்றும் வர்க்க அதிகார உறவுகள் முக்கிய பங்கு வகிக்கத்தான் செய்கின்றன. மறுவடிவாக்கம் எனும் பெயரில் வர்கத்தாள்வுகள் கட்டமைக்கப்படாமல் இருந்திருக்கவில்லை.

தேவதாசி சமூகங்களின் வரலாற்றையும் நவீனத்துவத்தின் கீழ் அவர்களது கலை மற்றும் அடையாளங்கள் எவ்வாறு மாற்றமடைந்தன என்பதையும் ஆழமாக உற்றுநோக்கலானது ஆணாதிக்க காலணித்துவ முறையின் தாக்கத்தினையும் பிராமணியத்தின் ஆழமான ஊடுருவலையும் புலப்படுத்துகின்றது. "தமிழ் இலக்கிய மரபில் நடனம் சிவனடன் தொடக்க காலத்தில் இணைக்கப்படவில்லை" (இரகுராமன்.செ, தமிர் நடன வரலாறு, க்ரியேடிவ் வொர்க்~hப், 2020, ப.262) எனும் முன்வைப்பானது கருத்தியல் ரீதியிலும், பண்பாட்டு மானுடவியல் பார்வையிலும், ஆற்றுகை மரபிலும் பெரும் தாக்கத்தை செலுத்தாமல் இல்லை. தொல்தமிழ் குடிகளது மீயுயர் பண்பாடு மாற்றமுறுவதனை காண முடிகின்றது.

எனவே "பரதநாட்டியம் பாரம்பரியமானது" என்ற கூற்றை மட்டும் ஏற்றுக்கொள்ளாமல், யாருடைய பாரம்பரியம்? யாரால் பாதுகாக்கப்பட்டது? யாருடைய உடல் அதன் பிரதிநிதியாக மாறியது? யாருடைய வரலாறு மறைக்கப்பட்டது? என்ற கேள்விகளையும் எழுப்புவது மானுடவியல் ஆய்வுக்கு அவசியமாகிறது. இவ் நோக்கில் பரதத்தினையம் ஆய்விற்குட்படுத்தி நோக்கல் ஆரோக்கியமானதே.

மானுடவியல் அணுகுமுறை:-

மானுடவியல் என்பது மனிதர்களின் சமூக வாழ்க்கை, பண்பாடு, நம்பிக்கைகள், நடைமுறைகள், அடையாளங்கள் மற்றும் சமூக உறவுகளை ஆராயும் துறையாகும். பரதநாட்டியத்தை மானுடவியல் நோக்கில் அணுகும்போது "இந்த நடனத்தில் என்ன உள்ளன?" என்ற கேள்வி மட்டும் போதாது.

அதற்குப் பதிலாக:

யார் ஆடுகின்றனர்?, யார் கற்றுக்கொடுக்கின்றனர்?, பார்வையாளர்களாக உள்ளனர்?, யாருக்காக ஆடப்படுகிறது?, எந்த சமூகக் குழுவை

பிரதிநிதித்துவப்படுத்துகிறது? எந்த சமூக நினைவுகள் வெளிப்படுத்தப்படுகின்றன? எந்த சமூகப் பிரச்சினைகள் மறைக்கப்படுகின்றன? நடனத்தின் மூலம் யார் அதிகாரம் பெறுகின்றனர்? யாருடைய குரல் இன்னும் குறைவாகக் கேட்கப்படுகிறது? என்ற கேள்விகள் எழுப்பப்பட வேண்டும்.

இதனால் பரதநாட்டியம் ஒரு வலுவான "உடல் வழி சமூக தொடர்பாடல்" சாதனம் எனக் கருதப்படுகிறது. காட்டாண்டி வாழ்வியலின் தொடக்கம் முதல் நாகரிககால ஆரம்பத்தே மக்கள்தம் பாடுகளும் அகம், புறம்சார் ஆடல்களுமாக வாழ்வியவோடு கூத்து எனும் ஆடல் வடிவிலே அடையாளப்படுத்தப்படுகின்றது. உதாரணமாக

வெற்றியின் கழிப்பில் ஆடப்பெறும் குரவை கூத்து.

"வென்றி யாடிய தொடித்தோள் மீகை

எழுமுடி கெழீஇய திரு ஞெமர் அகலத்து"

(ப.பத்து: 40- 12,13)

இரு கைகளை கோர்த்து பெண்கள் மகிழ்சிபொங்க ஆடும் துணங்கை

"முடக்கிய இருகை பழுப்புடையொற்றத்

துடக்கிய நடையது துணங்கையாகும்"

(திவாகர நூற்பா)

போன்ற வாழ்வியலோடு இரண்டறக் கலந்த ஆற்றுகை மரபை காணமுடிகின்றது. பிற்பட்ட காலத்தே இறைவனை புகழ்ந்து பாடி, ஆடும் தேவதாசி மரபினையும், மன்னர்களை பாடும் பண்பாட்டினையும், விடுதலைக்காக குரலெழுப்பும் மாற்றத்தினையும், சமகால மக்கள் பிரச்சினை, அரசியல் பேசம் புத்தாக்க நடன மரபினையுமாக பல்வகை மரபுகளை இலக்கிய மானிடவியல் நோக்கில் புரிந்துகொள்ள முடியும்.

ஆற்றுகை ஒரு சமூக நிகழ்வு:-

பரதநாட்டிய ஆற்றுகை என்பது தனிப்பட்ட நடனக் கலைஞரின் உடல் இயக்கம் மட்டும் அல்ல. அதில் நடனக் கலைஞர், இசைக்கலைஞர்கள், ஆசிரியர், மேடை, பார்வையாளர்கள், நிறுவனங்கள், நிதி அமைப்புகள், ஊடகங்கள் மற்றும் சமூக மதிப்பீடுகள் அனைத்தும் பங்கேற்கின்றன. இதனால் ஆற்றுகையை ஒரு சமூகச் செயல்பாடு என்று பார்க்க முடியும்.

ஒரு நடனக் கலைஞர் ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தை ஆடும் போது, அவர் வெறும் கதாபாத்திரத்தை மட்டும் உருவாக்குவதில்லை. அந்தக் கதாபாத்திரத்தின்: பாலினம், வயது, சாதி, சமூக நிலை, சமய அடையாளம், உணர்ச்சி, அதிகார உறவு

ஆகியவற்றையும் உடல் மூலம் உருவாக்குகிறார். இங்கு உடல் ஒரு சமூக அர்த்தத்தை உருவாக்கும் ஊடகம் ஆகிறது. ஆற்றுகையினுடைய கருப்பொருளும், ஆற்றுகை வெளிப்பாடும் ஆற்றுகையாளன் சார்ந்த வெளிப்பாடாகவும், சமூக பிரதிபலிப்பாகவுமே வெளிப்படுத்தப் படுகின்றது. ஆற்றுகையின் ஆரம்பம் தொடக்கம் முடிவு வரை ஏதோவொரு வகையில் சமூகம் ஆற்றகையோடும், ஆற்றுகையாளனோடும் வலுவான பிணைப்பினை கொண்டிருக்கிறது. இது ஒரு கூட்டிணைவாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இடம்பெறுகிறது. இதுவே ஆற்றுகை மரபு நிலைப்பிற்கு உறுதுணையாக அமைகிறது.

மாற்றமடைந்து வரும் பரநாட்டிய ஆற்றுகை மரபும்:அவசியமும்:-

பாரம்பரிய மார்க்கத்திலிருந்து கருப்பொருள் மைய ஆற்றுகைக்கு சமகால பரதநாட்டியம் வித்திட்டுள்ளது. பாரம்பரிய மார்க அமைப்பு இன்னும் முக்கியத்துவம் பெற்றாலும் சமகாலத்தில் பல நடனக் கலைஞர்கள் ஒரு குறிப்பிட்ட சமூக அல்லது சிந்தனைப் பிரச்சினையை மையமாகக் கொண்டு முழு நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றனர். அரங்கேற்றங்களில் மார்கமும் ஆற்றுகை நிகழ்வுகளில் மரபடன் இணைந்ததான கருத்துப்புலம்மிக்க புதுமைகளும் இணைக்கப்படுகின்றன

உதாரணமாக: பெண்களின் உரிமை, பாலின சமத்துவம், சாதி, சுற்றுச்சூழல், போர், இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை, மனநலம், சமூக நீதி, குழந்தைகள் உரிமை, மனித உரிமை போன்ற கருப்பொருள்கள் பரதநாட்டியத்தின் புதிய படைப்புகளில் இடம் பெறுகின்றன. இதனால் பரதநாட்டியம் பக்தி மற்றும் புராணக் கதைகளை மட்டுமே வெளிப்படுத்தும் கலை என்ற வரையறையிலிருந்து விரிவடைந்து சமூக உரையாடலுக்கான கலை வடிவமாகவும் மாறுகிறது. பிரச்சினைகளை கேள்விக்குள்ளாக்கும் சிறந்த ஊடகமாகவும் செயற்படுகின்றது.

பரதநாட்டியத்தின் பாரம்பரியப் படிமத்தில் பெண் உடல் முக்கிய இடம் பெற்றுள்ளது. ஆனால் சமகாலத்தில் பெண் என்பது வெறும் “நாயகி” அல்லது “பக்தை” என்ற பாத்திரத்திற்குள் மட்டுப்படுத்தப்படாமல் பல்வேறு சமூக அடையாளங்களுடன் காட்டப்படுகிறார். சுயாதீன வெளியிலே தமை புலப்படுத்தும் சந்திரலேகா போன்ற பெண்கள் பலர் தோற்றம் பெற்றுள்ளமையை காண முடிகின்றது.

சமகாலப் படைப்புகளில்: பெண்ணின் சுயாதீனம், குடும்ப வன்முறை, பாலியல் அரசியல், பெண்களின் தொழில் வாழ்க்கை, தாய்மை, உடல் அரசியல், பெண்ணிய எதிர்ப்பு, பாலின அடையாளம், போன்ற கருப்பொருள்கள் இடம்பெறுகின்றன. வரலாற்று ரீதியாக கடுமையான பாலினக் கட்டுப்பாடுகளுடன் தொடர்புடையிருந்த பரதநாட்டியத்தில் பாலின உள்ளடக்கம் சமகாலத்தில் கட்டுடைக்கப்பட்டு யாவரும் கற்றுக்கொள்ள முடிகின்றது. எனவே, சமகாலப் பரதநாட்டியத்தின் மாற்றம் என்பது பெண் கலைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது மட்டுமல்ல மாறாக, “யார் எந்த

உடலை ஆற்றலாம்?" என்ற கேள்வியையும் உள்ளடக்கியது. இன்று பரதநாட்டியம் இந்தியாவிற்குள் மட்டுப்படுத்தப்பட்ட கலை அல்ல. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற பல நாடுகளில் பரதநாட்டியம் கற்பிக்கப்படுகிறது மற்றும் நிகழ்த்தப்படுகிறது.

சமகாலப் பரதநாட்டியத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய காரணிகளில் ஒன்று டிஜிட்டல் தொழில்நுட்பமாகும். YouTube, Instagram, Facebook, Zoom போன்ற தளங்கள் மூலம்: பயிற்சி, நிகழ்ச்சி, பாடல், நடன விளக்கம், குறுநடனங்கள், கலைஞர் அறிமுகம் போன்றவை உலகளவில் பகிரப்படுகின்றன.

இதனால் "குரு → சீடன்" என்ற பாரம்பரிய அறிவுப் பரிமாற்ற முறை மட்டும் இல்லாமல்:

குரு → சீடன் → டிஜிட்டல் தளம் → உலகளாவிய பார்வையாளர் என விரவியுள்ளது.

சமகால பரதநாட்டியத்தில் மிக முக்கியமான விவாதங்கள் மரபுரீதியாக காணப்படுகின்றன. இவை ஆரோக்கியமான சிந்தனைகளையும் உரையாடல்களையும் தூண்டுகின்றது. "புதுமை செய்தால் பாரம்பரியம் அழிகிறதா?" என ஒருசாரார் சிந்திக்கின்றனர். ஒரு பார்வையில், பாரம்பரிய அடவுகள், முத்திரைகள், மார்க்கம், தாளம், அபிநயம் போன்ற அடிப்படைகளைப் பாதுகாப்பது அவசியம். மற்றொரு பார்வையில், கலை உயிருடன் இருக்க வேண்டுமானால் அது சமகால சமூகத்துடன் உரையாட வேண்டும். எனவே மாற்றமடைந்து வரும் மரபு மாற்றம் அவசியமானதாகும். இது "தக்கன பிழைத்தலும் தகாதன அழிதலும்" எனும் சார்ள்ஸ் டார்வினின் கூர்புக்கொள்கையை நினைவூட்டுகிறது.

கலைஞர்களாகிய நாம் பாரம்பரியம் மாற்றமின்மை, பரம்பரியத்துடன் புத்தளிக்கை, புதிய உருவாக்கம் என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். பாரம்பரியம் என்பது தலைமுறைகளுக்கு இடையே தொடர்ந்து கடத்தப்படும் நடைமுறை என்றாலும், ஒவ்வொரு தலைமுறையும் அதற்கு பன்மைத்துவப்படுத்தப்பட்ட புதிய பொருள்களை வழங்குகிறது. பரதநாட்டியம் சமூகத்தைப் பிரதிபலிக்கிறது என்று கூறுவது மட்டும் போதாது. அது சமூகத்தை உருவாக்கவும் செய்கிறது. ஆற்றுகைகள் சமூகத்தினோடு ஆழமாக உரையாடவும் செய்கிறது.

உதாரணமாக ஒரு பெண் அல்லது ஆண் மேடையில் சுயாதீனமான கதாபாத்திரமாக ஆடும்போது அது ஏற்கனவே உள்ள பெண் அல்லது ஆண் பற்றிய சமூகக் கருத்தை பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல் புதிய பாலின அடையாளத்தையும் உருவாக்கலாம். அதேபோன்று சாதி ஒடுக்குமுறையை மையப்படுத்திய ஒரு படைப்பு பார்வையாளர்களிடம் புதிய சமூகக் கேள்விகளை எழுப்ப முடியும். இதனால் பரதநாட்டியம்: சமூகத்தின் பிரதிபலிப்பு மட்டுமல்ல சமூக அர்த்தங்களை

உருவாக்கும் நிகழ்த்துக் கலை. இவை சமகாலத்தில் அவசியமானதொன்றாக அமைகிறது.

சமகாலப் பரதநாட்டியத்தில் மாற்றமடைந்து வரும் ஆற்றுகை மரபுகள் சமூக மாற்றங்களையும் பண்பாட்டு அடையாளங்களையும் வலுவாக பிரதிபலிக்கின்றன. பரதநாட்டியத்தின் பாரம்பரிய ஆற்றுகை மரபுகள் மரபுகளாக பேணப்படுகின்ற போதிலும் புதுமைஉருவாக்கங்கள் சமகாலத்தே மேற்கிழம்பி தோன்றியுள்ளது. உலகமயமாக்கல் பரதநாட்டியத்தின் ஆடை, ஆபரணம், ஆடுகளம், கருப்பொருள், கலைஞர்கள், பாடல்கள் என எல்லாவற்றிலும் ஆதிக்கத்தை செலுத்தியுள்ளதுடன் மாற்றங்களையும் உருவாக்கியுள்ளது. சாதி மற்றும் வர்க்கம் சமகால ஆற்றுகையில் தாக்கங்களை செலுத்துவதில்லை மாறாக சுதந்திர வெளி ஆற்றுகைகளை காணமுடிகின்றது. பாலினக் கருத்தாக்கங்கள் வாழ்வியல் போக்கிற்கேற்ப மாறுகின்றன. சமூகப் பிரச்சினைகள் தேவைகளிற்கேற்ப நடனக் கருப்பொருள்களாக வெளிப்படுத்தப்படுகின்றன டிஜிட்டல் ஊடகம் பரதநாட்டியப் பயிற்சி மற்றும் ஆற்றுகையை இவகுவாக மாற்றியுள்ளது. புலம்பெயர் சூழலில் பரதநாட்டியம் தமது சுயமபன அடையாளத்தை ஆழமான சிந்தனைகளுடன் உருவாக்குகிறது. இலங்கைச் சமூகச் சூழல் பரதநாட்டிய ஆற்றுகையில் இந்திய ஆற்றுகை தாக்கங்களை உள்வாங்கி அமைவதனை காணமுடிகின்றது. பாரம்பரியம் மற்றும் புதுமை இடையிலான உறவுகள் தேவைக்கமைய சிறப்பானதாகவும் காத்திரமாகவும் பேணப்படுகிறது.

இந்த ஆய்வின் அடிப்படையில் பின்வரும் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. பரதநாட்டியம் நிலையான பாரம்பரியம் அல்ல இது தொடர்ந்து மாற்றமடையும் உயிருள்ள பண்பாட்டு நடைமுறைகளை கொண்டமைந்துள்ளது. சமகால சமூக மாற்றங்கள் நடனக் கருப்பொருள்களில் பிரதிபலிக்கின்றன. சாதி மற்றும் வர்க்கம் இன்னும் பரதநாட்டியத்தின் கல்வி மற்றும் ஆற்றுகைத் தளங்களைப் பாதிக்கவைப்பதில்லை. பாலின பிரதிநிதித்துவம் விரிவடைந்து வருகிறது. புலம்பெயர் சமூகங்களில் பரதநாட்டியம் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாக்கும் கருவியாகிறது. டிஜிட்டல் ஊடகம் பாரம்பரிய குரு-சி~;ய முறையை மாற்றியமைக்கிறது. பரதநாட்டியம் சமூக நீதி தொடர்பான உரையாடலுக்கான கருவியாக மாறுகிறது. புதிய தலைமுறை கலைஞர்கள் பாரம்பரிய வடிவத்தையும் சமகால சிந்தனைகளையும் இணைக்கின்றனர். “பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்” என்பதுடன் “பாரம்பரியத்தை விமர்சன ரீதியாக மறுவாசிப்பு செய்தல்” என்பதும் முக்கியமாகும். இவை மக்களுடைய வாழ்கை முறைமைக்கமைய விரிவடைந்து பல்துறை ஆற்றுகை மரபுகளை பல்வேறுவகைப்பட்ட தளங்களில் உருவாக்கின்றது. இவையே சமகாலத்தின் அவசியமும் தேவைப்பாடுமாக அமைகின்றது.

முடிவுரை:-

சமகாலப் பரதநாட்டியம் பாரம்பரியத்தின் தொடர்ச்சி மட்டுமல்ல அது சமூக மாற்றங்களின் இயக்கத்துடன் தொடர்ந்து உரையாடும் ஒரு இயங்கியல் நிகழ்த்துக் கலை வடிவமாகும். தன் உடல் மொழி, இசை, அபிநயம், ஆடை, மேடை அமைப்பு, கதைக்களம் மற்றும் நிகழ்த்தல் சூழல் அனைத்தும் சமூக மாற்றங்களால் கையாளப்படுகின்றன.

காலனித்துவம், தேசியவாதம், சமூகச் சீர்திருத்தம், சாதி, வர்க்கம் மற்றும் பாலின அரசியல் ஆகியவை பரதநாட்டியத்தின் நவீன வடிவத்தை உருவாக்கிய வரலாற்றுப் பின்னணியாக உள்ளன. இன்றைய நிலையில், உலகமயமாக்கல், புலம்பெயர்வு, டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் சமூக நீதி சார்ந்த புதிய சிந்தனைகள் அதன் ஆற்றுகை மரபுகளை மீண்டும் மாற்றுகின்றன. சமகாலப் பரதநாட்டியத்தை ஒரு பரந்த சமூக-மானுடவியல் பரப்பில் ஆராய வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன.

எனவே சமகாலப் பரதநாட்டியத்தின் உண்மையான வலிமை அதன் பாரம்பரியத்தை அப்படியே மீண்டும் உருவாக்குவதில் மட்டும் இல்லை. பாரம்பரியத்துடன் உரையாடி புதிய சமூக அனுபவங்களுக்கு உடல்மொழி மூலம் வழங்குவதிலேயே அதன் உயிர்த்தன்மை உள்ளது. இதனடிப்படையில் சமூகப் பிரதிபலிப்பினூடே மாற்றமடைந்து வரும் பரநாட்டிய ஆற்றுகை மரபு காலத்தின் அவசியமாகிறது என்பதனை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

துணைநூல்கள்:-

References

அப்துல்இரசாக்> வே.கா> வரதராசன்,மா.பொ (2010). இலக்கியம் காட்டும் நாடக இலக்கணம். மணிமேகலைப் பிரசுரம்.

இரகுராமன்> சே. (2020). தமிழர் நடன வரலாறு. க்ரியேடிவ் வொர்க்~hப்.

எழிலழகன்> எஸ்.பி. (2016). மக்கள் தொடர்புக் கலை. நியூசென்சரிவுக்.

எஸ்தர் பிரதீபா> ஆ. (2018). கூடல்நூல்களில் ஆடல். மணிபாரதி அச்சகம்.

கிரு~hங்கினி. (2007). தமிழில் பரதநாட்டிய பாடல்கள். சதுரம் பதிப்பகம்.

சிவத்தம்பி> கா. (2018). தமிழர் கலைகள். குமரன் அச்சகம்.

ஞானா குவேந்திரன். (1994). பரதநாட்டியத்தில் தமிழிசைப்பாடல்கள். டாப்லைன் கம்பியூட்டர்.

தருமராஜ்> டி. (2021). தமிழ் நாட்டுப்புறவியல். கிழக்குப் பதிப்பகம்.

தனஞ்செயன்> ஆ. (2015).விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள். பாவை பிரிண்டர்ஸ்.

பக்தவத்சல பாரதி> (2014). இலக்கிய மானிடவியல், த பாபிரஸ், அச்சகம்.

பாலசுப்பிரமணியன்> கு.வெ. (2016). சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் கோட்பாடும்.

ஜெயராசா> சபா. (2008). மொழிக்காலணித்துவமும் பரதநாட்டியமும். சேமமடு பொத்தகசாலை.